**MINUTES OF THE PUBLIC HEARING MEETING FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY OF THIRU. R. SEENUVASAN OVER AN EXTENT OF 2.14.30 HECTARE LOCATED IN S.F.NOS. 25/1C, 1D, 1E, 1F, 1G, 26/2A, 3A, 25/1H1, 1I, 1J, 1K, 26/1A1, 1B1, 65/2 & 65/3 OF ELACHERI VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, CONDUCTED ON 06.08.2025 AT 01.00 PM IN M/S. SRI LAKSHMI VIJAYACHANDRAN MARRIAGE HALL, MATHUR VILLAGE, VEMBAKKAM TALUK & TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S. Siva | Revenue Divisional Officer(FAC),<br>Cheyyar,<br>Tiruvannamalai District. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution ControlBoard,<br>Tiruvannamalai District. |
| 3. | Dr. S. Sugashini | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 4. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 5. | Thiru. M. Tamil Mani | Tahsildar,<br>Vembakkam,<br>Tiruvannamalai District. |
| 6. | Thiru. A. K. Arul Murugan | Assistant Geologist,<br>Geology and Mining,<br>Tiruvannamalai District. |
| 7. | Thiru. M. Sathish | Revenue Inspector,<br>Vembakkam,<br>Tiruvannamalai District. |
| 8. | Public and NGOs | 65 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board welcomed the Revenue Divisional Officer, Cheyyar who presided over the public Hearing meeting, other Government officials, the public & the NGOs and explained the need for the conduction of Public Hearing for obtaining Environmental Clearance for the proposed Rough stone and gravel quarry as follows:

"The public hearing meeting is being conducted for the proposed project of M/s. Thiru. R. Seenuvasan over an extent of 2.14.30 hectare in Elacheri Village, Vembakkam Taluk, Tiruvannamalai District for obtaining prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA)as per the Environmental Impact Assessment Notification 2006."

As per the EIA Notification 2006, the mining projects (Individual or Cluster) having extent above 5 hectares require the conduction of public hearing meeting for obtaining Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notices for this public hearing were published in dailies of "The Times of India" (English) & "Daily Thanthi" (Tamil) on 02.07.2025 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone and gravel quarry of M/s. Thiru. R. Seenuvasan to be conducted at M/s. Sri Lakshmi Vijayachandran Marriage Hall on 06.08.2025 @ 01.00PM."

The District Environmental Engineer further stated that "The project proponent will explain the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details through power point presentation. Following the presentation, the general public and NGOs can express their views, suggestions and comments on the said project one by one either in oral or in written format during when the public should register their name & village name. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority. Thereafter, the authority will consider the issue of Environmental Clearance to this proposed quarry. The Revenue Divisional Officer, Cheyyar will inaugurate the public hearing meeting thereafter the project proponent will explain the Environmental Impact Assessment Study report."

The Revenue Divisional Officer, Cheyyar requested the project proponent to explain about the proposed rough stone and gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail and requested the general public to mention their name and their village name while expressing their views, suggestions and comments on the said project.

On behalf of the project proponent, Thiru. M. Sheik Nawas, Coordinator, M/s. Geo Exploration and Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone quarry of M/s. Thiru. R. Seenuvasan) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them through power point presentation.

Subsequently, the Revenue Divisional Officer, Cheyyar requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one.

The following are the views/suggestions/comments represented by the public:

**1. Thiru. Karunagaran, Chinna Elacheri Village.**

He stated that, "The establishment of this quarry will provide mining funds. Schools are functioning with the support of these funds. Infrastructure development, such as road construction and well-digging, are also carried out using these funds. This funds will bring numerous benefits to the Elacheri village" and concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**2. Mr. A. Pillaiyar, Chinna Elacheri Village.**

He stated that, "The quarry's establishment has not led to any insignificant concerns or difficulties for us. We would be perfectly satisfied if the road is properly maintained up to Mangal Koot Road" and also to clean up the soil deposited on the roads and concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**3. Thiru. V. Chandra Sekar, Elacheri Village.**

He stated, “the establishment of this quarry will provide us with mining funds. With these funds, we can address the panchayat's needs, such as road issues, drinking water problems, and school expansion projects. Not only that, this quarry provides direct or indirect employment opportunities for approximately 50 families, enabling them to earn for living. Therefore, we have no objections to the quarry's establishment in our village. We only request that the road and other aspects should be properly maintained and managed. Apart from this, we wholeheartedly support the quarry's establishment here & have no objections” and concluded his speech by **expressing his support** for the establishment of the quarry.

**4. Thiru. C. Anandhan, Chinna Elacheri Village.**

He stated, “Our house is located at a distance of 2 kilometers from this quarry site. we have no objections for the establishment of this proposed quarry. We would be happy if the quarry operates safely and without disturbing the public. I support this quarry” and concluded his speech by **expressing his support** for the establishment of the quarry.

**5. Thiru. R. Nandhakumar, Chinna Elacheri Village.**

He stated, “Two years ago, I was working in SIPCOT. Due to health issues, I had to quit my job there. Now, I'm working in a quarry which is located in our village. I have no objections to the quarry's presence. In fact, it's provided me with a job opportunity” and concluded his speech by **supporting the establishment of the quarry**.

**6.Thiru. E. Moorthy, Chinna Elacheri Village.**

He stated, “I mentioned this while speaking on behalf of Sithalapakkam village. I have been a ward member in Elacheri village for the past five years. I have already mentioned what projects can be implemented and what can be done using the mining funds. Using this funds, we've implemented various projects in Elacheri village over the past five years,

including Road construction, Drinking water facilities, Electricity supply, large water tanks. We've utilized the funds to provide these essential services and infrastructure to the village. The owner of the Srinivasa quarry is very helpful and will assist anyone who approaches them, regardless of who's asking. That's because they've been here for a long time and have previously owned a quarry. He's a kind-hearted person who will even lend a helping hand by providing materials like sand and gravel for building houses. He has done many favors for the village. It's the month of Aadi now. For festival funding, we know where to turn to with assurance. We approach the quarry owners directly. The quarry's presence enables our festivals to be celebrated successfully. Therefore, we in Elacheri village support the quarry's presence. My request is that they follow the rules and regulations provided by the government. There's a quarry association. If they take care of road maintenance, water sprinkling, and ensure the public isn't affected, that's sufficient. Protect the public, and after that, you can do whatever you want, whether it's earning money or helping others. Some lorry drivers slow down when we are travelling behind the lorry, while others don't even notice and just keep going about their way. Please advise them to yield to pedestrians and slow down when we are behind to avoid creating dust. Pedestrians can't get through when the lorries are going in front of them. If you regulate these activities and follow the government's guidelines properly, then we have no objections" and concluded his speech by expressing his **support for the establishment of the quarry**.

**7. Thiru. K. Ellappan, Chinna Elacheri Village.**

He stated, " The quarry's presence here doesn't pose any problems for us. In fact, it provides livelihood opportunities for people from our village. The presence of quarries have raised the people's standard of living and they're very helpful when we ask for assistance. They support our village festivals, schools, and other initiatives and even provide drinking water facilities when needed. They also provide help whenever needed. Therefore, we have no objections to the quarry's presence. In fact, we welcome this quarry" and concluded his speech by **supporting the establishment of the quarry**.

**8. Thiru. Baskar, Chinna Elacheri Village.**

He stated, "I would like to extend my warm greetings to the officials who have honored us with their presence today. I'd also like to express my heartfelt thanks to the police personnel who've come to ensure our safety. I'd also like to thank the Elacheri VAO and his assistant, Arun, for their support. I'd like to extend my warm greetings to all the members of the public who've taken the time to join us despite being invited. The quarry owned by Mr. Seenu from Arasanipalayam is located about 1 kilometer away from our village. According to the rules, quarries can be permitted if they're 300 meters away from the village. However, his quarry is actually 1.5 kilometers away. Therefore, I would like to express my opinion that we have no objections. As everyone has suggested, the quarry owners should advise their lorry drivers to give way to two-wheeler riders, allowing them to pass safely when they're driving their lorries. We request to sprinkle water on the roads to keep it clean, as the dust from the quarry is a nuisance when we travel. We urge them to address this issue by regularly cleaning the road and reducing the dust. We wholeheartedly welcome the quarry's establishment, as we have no objections to it" and concluded his speech **by supporting the establishment of the quarry**.

**9. Thiru. Subramani, Andhara pradesh NGO.**

He stated, "Today we are all participating in the public hearing meeting as part of environmental impact assessment procedure. Thanks to the Village President. So, today we are participating to obtain environmental clearance for the proposed rough stone and gravel quarry. The gravel & rough stone are important materials in the infrastructure field. We use both these materials for landscaping and laying roads. The materials are utmost important. So not only important but employment sources are also there. So, I request all the participants to encourage this mining and gravel mining for development. Thank you." and concluded his speech by **supporting the establishment of the quarry.**

**10. Thiru. Manoharan, Chinna Elacheri Village.**

He stated, "There are both benefits and drawbacks to this quarry. I'd like to share a small incident. One Monday morning, my wife and I were heading to work when five lorries came together. We stood aside to let them pass. However, another lorry coming from the opposite direction splashed water on us. We had to go home and change clothes before heading to work. We talk about protecting the environment, but nobody seems to care. Watering the road would help, but it's rarely done. Even when it's done, it's only once a day, either in the morning or evening. With 5000 lorries passing through daily, why not water the road twice or thrice? It would help to protect the environment. We are the ones operating and staying here. The roads are used by many people, and it affects them greatly. Watering the road would make it safer. But no one seems to be doing it. I'm requesting the lorry owners to please consider watering the road, especially in the morning. Drive safely and provide some protection to the public. If you provide safety, we can use the roads. If not, it's difficult for us to travel. Please water the road and drive safely. Thank you." and concluded his speech.

**11.Thiru. Inbasekaran, NGO, Arakonam.**

He stated, " While the quarry has both advantages and disadvantages, it provides permanent income opportunities for unemployed youth and rural communities. Therefore, we kindly request that you grant a no-objection certificate (NOC) for the quarry's operation" and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**12.Thiru. M. Dilli Babu, Sithalapakkam Village.**

He stated, "I wholeheartedly welcome the proposed quarry, as it provides employment opportunities for the people of Chithalappakkam, Chinna Elacheri, Arasanipalayam, and surrounding villages" and concluded his speech by expressing **his support for the quarry's establishment**.

**13.Thiru. R. Mohan, Arasanipaalai Village.**

He stated, "Around 50-60 families from our village work in this quarry, earning their livelihood in various ways. Therefore, the presence of this quarry is beneficial to our village" and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**14.Thiru.Prabhu, Chinna Elacheri Village.**

He stated, "we have no objections to the quarry's presence, and we wholeheartedly welcome it" and concluded his speech by expressing **his support for the quarry's establishment**.

**15.Thiru. Sunantha Reddy, NGO.**

He stated, "My best wishes to the management. The purpose of the public hearing is the environmental impact on the laying water land. The mining permission and gives NOCs, the mining is the governmental property. The government has right to sale or lease. The proponent has also a right to choose whatever his business. In this contest, the consultant has prepared EIA report and promised here to control plastic, proper of transporting and plantation. I request to give unconditional permission to this management"and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**16.Thiru. Ramachandra, NGO.**

He stated, "Greetings to the officials and everyone present. This industry is crucial for public life, development, and government revenue. It's an essential industry for public life. Without it, there would be no buildings, and without buildings, there's no world. Therefore, this quarry is necessary for public life. I urge everyone to cooperate with the quarry, and I request the officials to grant the necessary permissions. Thank you." and concluded his speech by expressing his **support for the proposed quarry**.

**The following 28 nos. of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone & gravel quarry. All the 28 nos. have expressed their support to the operation of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Thiru. Muthukumaran, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 2. | Thiru. Inbasekaran, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 3. | Thiru. V. Manikandan, Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 4. | Thiru. V. Suresh, Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 5. | Thiru. U. Sankaraiah, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 6. | Thiru. K. Saravana, Kanchipuram. | Expressed support in favour of the proposed quarry |
| 7. | Thiru. Malardavan, Chennai. | Expressed support in favour of the proposed quarry |
| 8. | Thiru. Muthu Raja, Ramnathapuram. | Expressed support in favour of the proposed quarry |
| 9. | Thiru. Rajendiran, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 10. | Thiru. Nokkiyamani, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 11. | Thiru. V. Mohan, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 12. | Thiru. Purushothaman, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 13. | Thiru. Venkatesan, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 14. | Thiru. Devalingam, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 15. | Thiru. Duraisamy, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 16. | Thiru. J. Raja, Dharmapuri. | Expressed support in favour of the proposed quarry |
| 17. | Thiru. Satti Reddy, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 18. | Thiru. Kayapati Naresh, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 19. | Thiru. Venkatesh boya, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 20. | Thiru. A. Venkata Subbiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 21. | Thiru. B. Balakrishna, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 22. | Thiru. K. Saradha, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 23. | Thiru. Subbaramaiah, Tirupati. | Expressed support in favour of the proposed quarry |

| | | |
|---|---|---|
| 24. | Thiru. Hajarathaiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 25. | Thiru. Ankaiah, Andhra Pradesh.. | Expressed support in favour of the proposed quarry |
| 26. | Thiru. Tamizhmani, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 27. | Thiru. Narasimhulu, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 28. | Palle Naveen Kumar | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the approval of Revenue Divisional Officer, Cheyyar, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 02.07.2025for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (12 pages/65 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting – 28 nos.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Revenue Divisional Officer(FAC),**
**Cheyyar.**

(4/6)

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், ஏழாச்சேரி கிராமத்தில் புல எண்கள். 25/1C, 1D, 1E, 1F, 1G, 26/2A, 3A, 25/1H1, 1I, 1J, 1K, 26/1A1, 1B1, 65/2 & 65/3 –ல் 2.14.30 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். R.சீனுவாசன் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 06.08.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மண்டபம் மாங்கால் கூட்ரோட்டில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ லக்ஷ்மி விஜயச்சந்திரன் திருமண மண்டபத்தில் பிற்பகல் 01.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. சீ. சிவா | வருவாய் கோட்ட அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு), செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம். |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 3. | முனைவர். சி. சுகாஷினி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 5. | திரு.M. தமிழ்மணி | வட்டாட்சியர், வெம்பாக்கம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 6. | திரு.எ.கி. அருள்முருகன் | உதவி புவியியலாளர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திருவண்ணாமலை மாவட்டம். |
| 7. | திரு. எம். சதீஷ் | வருவாய் ஆய்வாளர், வெம்பாக்கம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 8. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (65 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு

தலைமை வகித்த வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், ஏழாச்சேரி கிராமத்தில், 2.14.30 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். R.சீனுவாசன் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் சுரங்க நிறுவனமானது பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006-ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். R.சீனுவாசன் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். ஸ்ரீ லக்ஷ்மி விஜயச்சந்திரன் திருமண மண்டபத்தில் 06.08.2025 அன்று பிற்பகல் 01.00 மணியளவில் நடைபெறுமென தினத்தந்தி மற்றும் தி இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி தாள்களில் 02.07.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை

தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்"

வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. எம். ஷேக் நவாஸ், ஒருங்கிணைப்பாளர், தி/ள். ஜியோ எக்ஸ்பொளரேசன் & மைனிங் சொல்யூசன்ஸ், சேலம் (தி/ள். R.சீனுவாசன் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**<u>1. திரு. கருணாகரன், சின்ன ஏழாச்சேரி கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "இந்த குவாரி வருவதால் கனிமவள நிதி கிடைக்கும். பள்ளிகள் எல்லாம் இந்த கனிமவள நிதியில் இருந்து தான் இயங்கி வருகிறது. தார் சாலைகள் அமைத்தல், கிணறுகள் வெட்டுதல் போன்றவை இந்த கனிமவள நிதியில் தான் நடைபெறுகிறது. இந்த கனிமவள நிதியால் தான் ஏழாச்சேரி கிராமத்திற்கு நிறைய நன்மைகள் கிடைக்கும், இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>2. திரு. A. பிள்ளையார், சின்ன ஏழாச்சேரி கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "இந்த குவாரி வருவதால் எந்த ஒரு பிரச்சனையும் இல்லை. மாதத்திற்கு ஒருமுறை அந்த சாலையை சரி செய்து மாங்கால் கூட்ரோடு வரை செல்வதற்கு வழி செய்து விட்டால், எங்களுக்கு மன திருப்தியாக இருக்கும். சாலையில் உள்ள மண் எல்லாம் சுத்தம் செய்து விடுங்கள். வேறு எந்த பிரச்சனையும் இல்லை" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**<u>3. திரு. V. சந்திரசேகர், சின்ன ஏழாச்சேரி கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "இந்த கல்குவாரி வருவதால் எங்களுக்கு கனிமவள நிதி கிடைக்கும். அந்த நிதியின் மூலமாய் பஞ்சாயத்திற்கு தேவையான சாலை பிரச்சனைகள், குடிநீர் பிரச்சினைகள், பள்ளிகளோட விரிவாக்க பணிகள், இவையெல்லாம் மேற்கொள்ளலாம், அது மட்டுமல்லாமல், நேரடியாகவோ, மறைமுகமாகவோ, 50 குடும்பங்கள் இந்த கல்குவாரியால் பிழைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. அதனால் இந்த கல்குவாரி எங்கள் கிராமத்திற்கு வருவதில் எந்தவிதமான ஆட்சேபனை கிடையாது. முறையான முறையில் சாலை மற்ற விஷயங்களை எல்லாம் பராமரித்து சரியாக மேற்கொள்ள வேண்டும் என்பதை மட்டும் ஒரு கோரிக்கையாக வைக்கின்றோம், மற்றபடி இந்த குவாரி வருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. முழுமனதாக ஆதரிக்கின்றோம்", என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**4. திரு. C. ஆனந்தன், சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்தக் கல் குவாரியிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் எங்கள் வீடு உள்ளது. இந்த கல்குவாரி வருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. இந்த கல்குவாரியானது பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் பாதுகாப்பு முறையில் செயல்பட்டால் சந்தோஷம். இதனை ஆதரிக்கின்றேன் என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**5. திரு. R. நந்தகுமார், சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில், "இரண்டு வருடங்களுக்கு முன்பு சிப்காட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். உடம்பு சரி இல்லாமல் போனதால் அங்கு வேலையில் இருந்து நின்றுவிட்டேன். தற்பொழுது எங்கள் ஊர் கிராமத்தில் உள்ள கல்குவாரியில் தான் பணிபுரிந்து வருகின்றேன். எனக்கு கல்குவாரி வருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. எனக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது," என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. E. மூர்த்தி, சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில், "சித்தாலப்பாக்கம் கிராமத்திற்காக பேசும் போதே சொன்னேன். ஏழாச்சேரி கிராமத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக நான் வார்டு உறுப்பினராக இருந்தேன். கனிமவள நிதியிலிருந்து எந்தெந்த திட்டங்களை செயல்படுத்த முடியும் என்னென்னவெல்லாம் செய்ய முடியும் என்று ஏற்கனவே சொல்லி இருந்தேன். அதனால் கனிமவள நிதியிலிருந்து சாலையாகட்டும், குடி தண்ணீர் வசதியாக இருக்கட்டும், மின்சார வசதியாக இருக்கட்டும், பெரிய பெரிய தண்ணீர் தொட்டிகளாக இருக்கட்டும், எல்லாமே சிறப்பாக இந்த ஏழாச்சேரி கிராமத்திற்கு கனிமவள நிதியிலிருந்து பெற்று கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்து கொடுத்து இருக்கின்றோம். அதனால் இப்போது சீனிவாச கல்குவாரி இருப்பவர் யார் கேட்டாலும் எந்த உதவி வேண்டுமானாலும் செய்யக்கூடியவர். ஏனென்றால், அவர்கள் ரொம்ப காலமாக இங்கு இருக்கிறார். இதற்கு முன்னாடி கல்குவாரி வைத்திருக்கிறார். வீடு கட்டுவதற்கு மண் ஜல்லி வேண்டுமானால்

கடனாக கூட கொடுப்பார். நல்ல உள்ளம் கொண்டவர். கிராமத்திற்கு தேவையான உதவிகள் செய்துள்ளார். இப்போது ஆடி மாசமாக இருக்கிறது. திருவிழாவிற்கு நிதி வேண்டும் என்றால் எங்கே போய் உரிமையோடு நிற்கிறோம். கல்குவாரியில் உரிமையாளர்களிடம் தான் போய் நிற்கிறோம். திருவிழா சிறப்பாக நடக்குது என்றால் அது கல்குவாரியால் தான். ஆகையால் ஏழாச்சேரி கிராமத்தில் கல்குவாரி வர நாங்கள் ஆதரவு தெரிவிக்கின்றோம். என் கோரிக்கை என்னவென்றால் அரசு வழங்குகின்ற விதிமுறைகளை பின்பற்றுங்கள். கல்குவாரி சங்கம் இருக்கிறது. அதன் மூலமாக சாலை பராமரிப்பது தண்ணீர் தெளிப்பதோ பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அவர்களைப் பார்த்துக் கொண்டால் போதும். பொதுமக்களை பாதுகாத்து கொள்ளுங்கள். பிறகு நீங்கள் சம்பாதிப்பது மற்ற உதவி செய்வதோ நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யுங்கள். சில லாரிகள் பின்னாடி செல்லும்போது ஓட்டுநர் வழி விடுகிறார்கள். சில ஓட்டுனர் கண்டு கொள்வது இல்லை. அவர்கள் போக்கிற்கு செல்லுகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் கொஞ்சம் அறிவுரை வழங்குங்கள். மக்கள் வந்தால் வழிவிடுங்கள். பின்னாடி வரும்போது தூசிப்படும். பின்னாடி மக்களால் செல்ல முடியாது. இவையெல்லாம் முறைப்படுத்தி, அரசு சொல்கின்ற வழிகாட்டு முறைகளை முறையாகப் பின்பற்றி செயல்படுங்கள். எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை, என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**7. திரு. K. எல்லப்பன், சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில் "இங்கு குவாரி வருவதால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. இந்த குவாரி மூலமாக எங்கள் ஊரில் இருந்து வேலைக்குச் சென்று பிழைக்கிறார்கள். அவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்து இருக்கிறது. மேற்படி பார்த்தீர்கள் ஆனால் ஏதாவது உதவி அவர்களிடம் கேட்கும்போது கண்டிப்பாக உதவி செய்கிறார்கள். அதே போல் ஊர் திருவிழாவிற்கு பள்ளிகளுக்கு மற்றும் என்னென்ன தேவையோ செய்கிறார்கள். குடிநீர் வசதி தேவை என்றால் செய்கிறார்கள். ஏதாவது உதவி என்றாலும் செய்கிறார்கள். ஆகையால் இந்த குவாரி வருவது எங்களுக்கு எந்தவிதமான

ஆட்சேபனையும் இல்லை. எந்த பிரச்சனையும் இல்லை. நாங்கள் வரவேற்கின்றோம் இந்த குவாரியை", என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**8. திரு. பாஸ்கர், சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில், "இங்கே வருகை தந்துள்ள அதிகாரி அவர்களுக்கு என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். காவல்துறையிலிருந்து வந்து பாதுகாப்பு பணியில் இருக்கும் அவருக்கும் மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் ஏழாச்சேரி கிராம நிர்வாக அலுவலர் அவரது உதவியாளரான அருண் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுமக்களும் நம் அழைப்பை ஏற்று வந்திருக்கிறார்கள். அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு அரசாணிப்பாளையத்தில் இருக்கும் சீனு அவர்கள் கல்குவாரி நம் ஊரில் இருந்து ஒரு கிலோமீட்டர் மேலே உள்ளது. ஊரிலிருந்து 300 மீட்டர் தொலைவில் இருந்தால் கல்குவாரிக்கு அனுமதி தரலாம். இவரது கல்குவாரி ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அதனால் ஆட்சேபனை இல்லை என்று என்னுடைய கருத்தை தெரிவிக்கிறேன். எல்லோரும் சொல்வது போல் இருசக்கர வாகனம் செல்லும் போது உரிமையாளர்கள் லாரியை வழிவிட்டு செல்லுமாறு அறிவுறுத்த வேண்டும். சாலையில் தண்ணீர் ஊற்றி சாலையை சுத்தம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம். சாலையில் சென்றால் தூசி மேலே படுகிறது. தூசி சுத்தம் செய்து சரி செய்து தர வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றோம். இந்த குவாரி வருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை மனதார வரவேற்கின்றோம்", என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**9. திரு. சுப்பிரமணியம் ஆந்திர பிரதேஷ், சமூக ஆர்வலர்.**

இவர் கூறுகையில்," இன்று நாம் அனைவரும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் ஒரு பகுதியாக கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்றுள்ளோம். இந்த கூட்டத்தில் பங்கேற்ற கிராமத் தலைவர் அவர்களுக்கு நன்றி எனவே, இன்று முன்மொழியப்பட்ட மூலப்பொருட்கள், கல் மற்றும் சரளைப் பொருட்களுக்கான

சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற நாங்கள் பங்கேற்கிறோம். உள்கட்டமைப்புத் துறையில் இது மிக முக்கியமான பொருள், நீண்ட காலமாக இந்த பொருட்கள் சாலைகளை அமைப்பதற்கு முன்பும், அமைத்த பிறகும் பயன்படுத்துகிறோம். பொருட்கள் மிக முக்கியமானவை. எனவே முக்கியமானது மட்டுமல்ல, வேலைவாய்ப்பு ஆதாரங்களும் உள்ளன. எனவே, அனைத்து பங்கேற்பாளர்களும் இந்த சுரங்கம் மற்றும் சரளைச் சுரங்கத்தை வளர்ச்சிக்காக ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி." என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**<u>10. திரு. மனோகரன், சின்ன ஏழாச்சேரி கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "இந்த கல்குவாரியினால் எங்களுக்கு நன்மையும் இருக்கிறது. அதே நேரத்தில் தீமையும் இருக்கிறது. ஒரு சின்ன சம்பவம் மட்டும் உங்கள் அனைவருக்கும் ஞாபகம் செய்கிறேன். கேட்டுக் கொள்ளுங்கள். திங்கள் கிழமை காலையில் நானும் என் மனைவியும் வேலைக்கு செல்வதற்காக வந்து கொண்டிருந்தோம். ஐந்து லாரிகள் ஒன்றாக வந்தது. நாங்கள் ஓரமாக நின்று விட்டோம். நாங்கள் வழி விடுகிறோம் அவர்கள் சென்றார்கள். ஆனால் எதிரில் லாரி ஒன்று வந்தது. அங்கு தண்ணீர் இருந்தது. அந்தத் தண்ணீர் எங்கள் மீது அடித்து நாங்கள் இருவரும் வீட்டிற்கு சென்று துணியை மாற்றிக் கொண்டுதான் வேலைக்கு சென்றோம். சுற்றுச்சூழல் சுற்றுச்சூழல் என்று சொல்கிறோம். ஆனால் யாரும் அதை பாதுகாப்பதில்லை. அந்த சாலையில் தண்ணீர் ஊற்றினால் நன்றாக இருக்கும். ஆனால் யாரும் அதை செய்வதில்லை. அப்படி தண்ணீர் ஊற்றினாலும் ஒரு முறை தான் ஊற்றுவார்கள் காலை அல்லது மாலை என்று ஊற்றுவார்கள். காலையில் இருந்து 5000 லாரிகள் செல்கிறது. ஆனால் தண்ணீர் ஊற்றுவது ஒருமுறைதான். ஏன் இரண்டு முறை மூன்று முறை தண்ணீர் ஊற்றுங்களேன். சுற்றுச்சூழல் பாதிக்காமல் இருக்கும். நீங்கள் தான் செய்கிறீர்கள் நீங்கள் தான் இருக்கப் போகிறீர்கள். சாலையில் எவ்வளவு பொதுமக்கள் செல்கிறார்கள் எவ்வளவு பேரை பாதிக்கிறது. தண்ணீர் ஊற்றினால் கொஞ்சம் பாதுகாப்பாக இருக்கும். யாரும் தண்ணீர் ஊற்றுவதில்லை. தயவு செய்து சொல்கிறேன் இந்த லாரிகள் வைத்திருக்கிறவர்கள் கொஞ்சம் யோசனை செய்து

செய்யுங்கள். காலையில் தண்ணீர் ஊற்றுங்கள். கொஞ்சம் பாதுகாப்பாக லாரிகளை ஓட்ட சொல்லுங்கள். பொதுமக்களுக்கு கொஞ்சம் பாதுகாப்பு கொடுங்கள். நீங்கள் பாதுகாப்பு கொடுத்தால் தான் நாங்கள் சாலையில் செல்ல முடியும். நீங்கள் பாதுகாப்புக் கொடுக்கவில்லை என்றால், நாங்கள் சாலையில் செல்ல முடியாது. தயவுசெய்து சாலையில் தண்ணீர் ஊற்றி விட்டு வண்டி ஓட்டுங்கள். நன்றி. வணக்கம்." என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**11. திரு. இன்பசேகரன், சமூக ஆர்வலர், அரக்கோணம்.**

இவர் கூறுகையில், " இந்தக் கல்குவாரியால் பல நன்மைகள் இருந்தாலும் சில தீமைகள் இருக்கத்தான் செய்கிறது. கல்குவாரியால் பல வேலையற்ற இளைஞர்கள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்க செய்கிறது. எனவே இந்த கல்குவாரிக்கு வருவதற்கு தடை இல்லா சான்று வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்", என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**12. திரு. டில்லி பாபு, சித்தாலபாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில், இந்த R. சீனு குவாரி வருவதால், சித்தாலப்பாக்கம் சின்ன ஏழாச்சேரி அரசாணிபாளையம் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளதால் வருக வருக என வரவேற்கிறேன்", என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**13. திரு. R. மோகன், அரசாணிபாளையம் கிராமம்.**

இவர் கூறுகையில், எங்கள் ஊரில் சுமார் 50, 60 குடும்பங்கள் இந்த கல்குவாரியில் வேலை செய்து பல்வேறு வகையில் பிழைக்கிறார்கள். அதனால் இந்த கல்குவாரி வருவது எங்கள் ஊருக்கு நன்மையே என்று "கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**14. திரு. பிரபு, சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த கல்குவாரி வருவதற்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை. இந்த கல்குவாரியை நல்ல முறையில் வரவேற்கின்றோம்", என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**15. திரு. சுனந்தா ரெட்டி, சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர்**

இவர் கூறுகையில், "நிர்வாகத்திற்கு எனது வாழ்த்துக்கள். கருத்து கேட்பு கூட்டத்தின் நோக்கம், சுரங்க அனுமதி மற்றும் தடையில்லா சான்றிதழ்களை வழங்குதல், சுரங்கம் என்பது அரசாங்க சொத்து. அரசாங்கத்திற்கு விற்பனை அல்லது குத்தகைக்கு உரிமை உண்டு. ஆதரவாளருக்கு தனது எந்த தொழிலைத் தேர்வுசெய்யும் உரிமையும் உள்ளது. இந்தக் கூட்டத்தில், ஆலோசகர் சாலை மேம்பாடு மற்றும் மரங்கள் நடுவது குறித்து இங்கு வாக்குறுதி அளித்ததைப் போன்ற EIA அறிக்கையைத் தயாரித்துள்ளார். நிர்வாகத்திற்கு நிபந்தனையற்ற அனுமதியை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.", என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**16. திரு. ராமச்சந்திரா, சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர்.**

இவர் கூறுகையில், "அதிகாரிகளுக்கு வணக்கம், இங்கு உள்ள அனைவருக்கும் வணக்கம். பொது வாழ்க்கைக்கும் வளரும் மக்களுக்கும், அரசாங்க வருமானத்திற்கும் இத்தொழில் அவசியமானது. இத்தொழில் பொது வாழ்க்கைக்கு தேவையான தொழில். இத்தொழில் இல்லாமல் கட்டிடங்கள் இல்லை கட்டிடங்கள் இல்லாமல் உலகமே இல்லை. இதனால் இக்குவாரி பொது வாழ்க்கைக்கு தேவையாக உள்ளது. அதனால் அனைவரும் இக்குவாரிக்கு ஒத்துழைக்க வேண்டும். நான் அதிகாரிகளை இந்த குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டிக்கொள்கிறேன். நன்றி.", என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 28 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 28 நபர்களும் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| வ. எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு. முத்துக்குமரன்,<br>கடலூர். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2. | திரு. இன்பசேகரன்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3. | திரு. V. மணிகண்டன்,<br>விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4. | திரு. V. சுரேஷ்,<br>விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5. | திரு. U. சங்கரய்யா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6. | திரு.K. சரவணா,<br>காஞ்சிபுரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7. | திரு. மலார்தவன்,<br>சென்னை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8. | திரு. M. முத்துராஜா,<br>இராமநாதபுரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9. | திரு. இராஜேந்திரன்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 10. | திரு. நோக்கியாமணி,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 11. | திரு. மோகன்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 12. | திரு. புருஷோத்தமன்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 13. | திரு. வெங்கடேஷன்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 14. | திரு. தேவலிங்கம்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 15. | திரு. துரைசாமி,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 16. | திரு. J. ராஜா,<br>தர்மபுரி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 17. | திரு. சத்தி ரெட்டி,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 18. | திரு. கயாபட்டி நரேஷ்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 19. | திரு. வெங்கடேஷ் பாயா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 20. | திரு. A. வெங்கட சுப்பய்யா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 21. | திரு. B. பாலகிருஷ்ணா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 22. | திருமதி. K. சாரதா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 23. | திரு. சுப்பராமையா,<br>திருப்பதி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 24. | திரு. ஹஜரத்தையா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 25. | திரு. S. அங்கய்யா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 26. | திரு. தமிழ்மணி,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 27. | திரு. நரசிம்மசிலு,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 28. | பாலே நவீன் குமார்,<br>தெலுங்கானா | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்களின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 02.07.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (11
4. பக்கங்கள்/65 நபர்கள்)
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
6. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
7. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
8. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் வாயிலாக பெறப்பட்ட 28 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**வருவாய் கோட்ட அலுவலர்(முகூபொ),**
**செய்யாறு.**

(1/6)